Registered as a Newspaper பக்கங்கள் 6 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

The Eelanaatham மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 8 22 - 05 - 1994 ஞாயிற்றுக்கிழமை ஓசை 93

## இலங்கை செஞ்சிலுவை வாகனம் பயன்படுத்துவதில் புதிய கட்டுப்பாடு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இயங்கும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளைகளின் பாவனையிலுள்ள வாகனங்கள் பயன்படுத்தப்படுவது தொடர்பாக புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட இருப்பதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் உப தலைவர் ஐசக் அபேசிங்க தெரிவித்துள்ளார். அடுத்த மாதம் தொடக்கம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சேவையில் ஈடுபடும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க வாகனம் தொடர்பாக முழு விபரமும் அவை குறிப்பிடப்படும் நாட்களில் சேவையில் ஈடுபடும் நேரங்கள் மற்றும் இவ் வாகனங்களின் போக்குவரத்து பாதைகள் என்பன தொடர்பாக முழு விபரமும் பெறப்பட்டு பாதுகாப்பு அமைச்சுக்கு (6ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தேவைக்கான விமான கொள்வனவில் மோசடி

# பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் மீது இராணுவ அதிகாரிகள் குற்றச்சாட்டு!

### குடியிருப்பு மீது எறிகணை வீச்சு

(தொல்புரம்)

காரைநகரில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் தமதுகாவல்நிலைகளிலிருந்து நேற்று முன்தினம் இரவு 10.35 மணியளவில் பொன்னாலை, மூளாய் பகுதிகளின் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி பலத்த எறிகணை வீச்சினை மேற்கொண்டனர்.

இவ் எறிகணைகள் மேற்படி பகுதிகளின் மக்கள் குடியிருப்புக்களை அண்மித்த பல இடங்களில் வீழ்ந்து வெடித்தன. இச் சம்பவத்தில் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என தெரிய வருகிறது (41)

### தமிழீழ வைப்பகம் நாளை திறப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் நிதித்துறையினரால் முதலாவது தமிழீழ வைப்பகம் நாளை திங்கட்கிழமை பகல் 12.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

தமிழரின் பொருண்மிய வலுவினைப்பெருக்க இந்த தமிழீழ வைப்பகம் யாழ் நகரில் திறந்து வைக்கப்படவுள்ளதாக நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

இவ்வைப்பகத்தில் நடைமுறைக்கணக்கு, தேட்டக் (சேமிப்பு) கணக்கு, நிலையான வைப்புக்கணக்கு என்பவற்றை ஆரம்பிக்க முடியும் என்பதுடன் மேம்பாட்டுக் கடன் அடகுக் கடன் வாணிபக்கடன் என்பவற்றையும் பெற்றுக் கொள்ள முடியும் இது தமிழரின் முதலீட்டினால் தமிழீழத்தில் உருவாகும் ஒரேபொரு வைப்பகமாகும்.

## ஊழலைத் தடுத்துநிறுத்த சிறிமாவிடம் கோரிக்கை

(கொழும்பு)

**இராணுவத்தினருக்கென 245 கோடி ரூபா பெறுமதி வாய்ந்த இரு போக்குவரத்து விமானங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும் இக்கொள்வனவின் மூலம் பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு பெருமளவு கமிஷன் கிடைக்கவுள்ளதாகவும் இராணுவ உயர் அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர். இவ் ஊழலை உடன் தடுத்து நிறுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவிடமும் ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்களிடமும் இவ் இராணுவ அதிகாரிகள் கடித மூலம் கேட்டுள்ளனர்.**

இராணுவத்தினருக்கென 245 கோடி ரூபா பெறுமதி வாய்ந்த இரு போக்குவரத்து விமானங்களின்கொள்வனவை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு இராணுவ உயர் அதிகாரிகள் குழுவொன்று எதிர்க்கட்சித்தலைவி சிறிமாவோ பண்டார நாயக்காவிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது

லேக்கி நிறுவனத்தின் மேற்படி சி-130ரக இரு இராணுவ போக்குவரத்து விமானக்கொள்வனவு குறித்துஇந்நிறுவனத்...

...டப்பட்டுள்ளது.

இந்த விமானக் கொள்வனவு நடைபெறுமானால்மேற்படி பாதுகாப்பு அமைச்சின் மூத்த அதிகாரிகளுக்கு பெரியளவில் கமிஷன் கிடைக்கப் பெறும் எனவே இக்கொள்வனவை தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை எடுங்கள் என சிறிமாவோவிற்கு அனுப்பப்பட்ட அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

இவ்வருட நவம்பர் மாதத்திற்கு முன்பாக ஜனாதிபதி தேர்தல் நடைபெற முன்னாக இவ்விமான கொள்வனவு செய்யப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது இதன் பொருட்டு அதிசயிக்கத்தக்க வகையில் ஒரு கேள்வி பத்திரம் தயாரிக்கப்பட்டது என அதிகாரிகள் குழுவினர் சிறிமாவோபண்டாரநாயக்காவிற்கு (6 ஆம் பக்கம் பார்க்க)

## தனிநாடு கோரிக்கையிலிருந்து தமிழர் எவ்வாறு பின்வாங்க முடியும்?

## புதிய விமானக் கொள்வனவிற்கு இப்பொழுது வந்த அவசியம் என்ன?

## எவ்வாறு பின்வாங்க முடியும்?

### ஐரிஷ் நாட்டு மதகுரு கேள்வி

(கொழும்பு)

இனப்பிரச்சினையே இல்லை இங்கிருப்பது பயங்கரவாதப்பிரச்சினை என ஜனாதிபதி அறிவித்திருப்பது அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்துவதாக உள்ளது. இந்நிலயில் இனப்பிரச்சினையை அரசால் எவ்வாறு கையாள முடியும் இந்நிலையில் தனிநாடு கோரிக்கையிலிருந்து தமிழர்கள் பின்வாங்க முடியுமா என்று முடிவு செய்யும் உரிமையை உங்களிடம் விடுகிறேன். இனப்பிரச்சினை நீடிக்குமானால் தமிழர்கள் இப்போது சென்றுகொண்டிருக்கும் பாதையிலிருந்து அவர்களை திசைதிருப்ப முடியாது என்பது வடபகுதி மக்களின் கருத்தாகும் இதனை நானும் ஏற்றுக்கொள்கிறேன் இவ்வாறு ஐரிஷ்நாட்டு மெதடிஸ் சபையைச்சேர்ந்த கிறிஸ்தவ மதகுரு ஒருவர் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார் தமது யாழ்ப்பாண விஜயம் தொடர்பாக தேசிய கிறிஸ்ரியன் கவுன்சிலின் கொழும்புக் கிளையின் வெளியீடு ஒன்றில் இவர் இவ்வாறு எழுதியுள்ளார்; அதில் மேலும், நான் ஒரு ஐரிஷ் நாட்டை சேர்ந்தவன் தமிழோ, சிங்களமோ தெரியாது. யாழ்ப்பாண நிலைமை தெரிந்துகொள்ள என்னிடம் உள்ள ஒரே ஒரு தகுதி எனது நாட்டில் நடைபெறும் விடுதலைப் போராட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இராணுவ நடவடிக்கைகளால்

### பாதிப்படைந்த சங்கங்கள் நஷ்டஈடு கோருகின்றனர்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கையினால் பாதிப்படைந்த கூட்டுறவுச் சங்கங்களின் நஷ்டஈட்டுப் பணத்தை வழங்குமாறு யாழ். அரசாங்க அதிபருக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது:

யாழ். மாவட்டத்தில் கடந்தகால இராணுவ நடவடிக்கையினால் பல கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள் பாதிப்படைந்ததுடன் பல கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் கைவிடப்பட்டன இந்த நஷ்டஈட்டுப் பணமே கோரப்பட்டுள்ளது.

தீவகத்தின் நான்கு சங்கங்கள் மற்றும் தெல்லிப்பளை, பண்டத்தரிப்பு, ஊர்காவற்றுறை ஆகிய சங்கங்கள் இராணுவ நடவடிக்கையினால் பாதிப்படைந்துள்ளன.

ஊர்காவற்றுறை சங்கத்தில் மட்டும் சுமார் முப்பது இலட்சத்து நாற்பத்து மூவாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் கைவிடப்பட்டுள்ளன.

இந்தப் பொருள்களுக்குரிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரணில் இன்று தென்கொரியா பயணம்

(கொழும்பு)

சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தென்கொரியாவுக்கு உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு இன்று புறப்பட்டுச் செல்லவுள்ளார் விஞ்ஞான தொழில் நுட்பத் துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தென்கொரிய ஜனாதிபதி கிம் இல் சுங்கையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

அத்துடன் தென்கொரியாவின் முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்களுடன் சிறிலங்காவில் முதலீட்டை ஊக்குவிப்பது தொடர்பாகவும் பேச்சு நடாத்தவுள்ளார். இப்பேச்சுக்களில் கலந்துகொள்வதற்காக கொழும்பிலுள்ள பிரபல வர்த்தக பிரமுகர்களும் பிரதமருடன் பயணம் செய்யவுள்ளனர்.

## அமைச்சர் ரேணுகா ஹேரத் விரைவில் வெளியேற்றம்

சுகாதார மகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத் வெகு விரைவில் அமைச்சரவையிலிருந்து வெளியேற்றப்படவுள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்டக் குழுவினர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மேலும் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பதவி விலகக் கூடாதென சில அழுத்தங்களைக் கொடுத்த ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

படி சி-130ரக இரு இராணுவ போக்குவரத்து விமானக்கொள்வனவு குறித்துஇந்நிறுவனத்தின் இரு பிரதிநிதிகளுடன் விமானப்படை உயர் அதிகாரிகள் தற்போது பேச்சுநடத்திவருவதாகவும் இவ்வுயர் அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சின் இருமூத்த அதிகாரிகளின் வழிகாட்டலிற்கமைய இப்பேச்சுகளை நடத்தி வருவதாகவும் அக்கடிதத்தில் குறிப்பி

## இப்பொழுது வந்த அவசியம் என்ன?

(கொழும்பு)

பல வசதியீனங்களுக்கு மத்தியில் அடிப்படை தேவைகள் கூட பூர்த்தி செய்யப்படாத நிலையில் வடக்கில் இராணுவம் திண்டாடும் போது லேசகீ நிறுவனத்தின் இராணுவ போக்குவரத்து விமானக் கொள்வனவுக்கு தற்போது என்ன அவசரம் என இராணுவ உயரதிகாரிகள் சிலர் கேள்வி எழுப்பியுள்ளனர்

பாதுகாப்பு அமைச்சின் சிலர் உயர்அதிகாரிகளுக்கு கமிஷன் கிடைப்பதற்காக பாதுகாப்பு செலவை பல கோடி கணக்கில் ஏன் விரயம் செய்ய வேண்டும் இன்று விமானப்படையிடம் 90ஆசனங்கள் கொண்டவை 8 ரக இரு போக்குவரத்து விமானங்களும் 48 ஆசனங்கள் கொண்ட எச். எஸ் 478 ரக

(6 ஆம்பக்கம் பார்க்க)

# பருத்தித்துறை கடலில் திடீர் மோதல் ஏழு கடற்புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கடற்பரப்பில் கடந்த 19-ம் திகதி பயிற்சியில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகள் போராளிகளுக்கும் சிறிலங்கா கடற்படை கப்பலிற்கும் இடையே ஏற்பட்ட திடீர் மோதலில் ஏழு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சவடைந்த;

- கடற்புலி மேஜர் வசந்தன் சித்திரவேல் ரவி, திருகோணமலை.
- கடற்புலி மேஜர் மேனன்/ கலைவாணன், முருகேசு ஜெகதீஸ்வரன், திருகோணமலை
- கடற்புலி மேஜர் சாள்ஸ்/ குணா, திருநாவுக்கரசு நமசிவாயம், காங்கேசன்துறை.
- கடற்புலி கப்டன் கணேஸ் சோமசுந்தரம் ரவிச்சந்திரன், மானிப்பாய்.
- கடற்புலி கப்டன் குகா/ புரலவன், செல்வரட்ணம் முருகமூர்த்தி, பருத்தித்துறை
- கடற்புலி கப்டன் மணாளன், குலசேகரம் ஸ்ரீரஞ்சன், திருகோணமலை
- கடற்புலி கப்டன் சாமந்தி/ சஞ்சிகா, தங்கராஜா சுதர்ஷினி, சிவன் வீதி, உரும்பிராய்; ஆகிய ஏழு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## கடற்புலிகளின் உருவப்பட ஊர்தி ஊர்வல பாதை

பருத்தித்துறை கடற்பரப்பில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளையில் சிறிலங்கா கடற்படை சண்டைக் கப்பல்களுடனான மோதலில் வீரச்சாவடைந்த ஏழு போராளிகளினதும் நினைவுருவப்படங்களைத் தாங்கிய ஊர்திகள் இன்று மக்கள் அஞ்சலிக்காக பவனி வர உள்ளன

இவ்வூர்திவலிகாமம் கோட்டத்தில் காலை 10 00 மணிக்கு உரும்பராய்ச் சந்தியில் ஆரம்பித்து புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம், தொட்டிலடிச் சந்தி, சங்கானை, சித்தன்கேணி, வட்டுக்கோட்டை, அராலி, சங்கரத்தை, நவாலி, மானிப்பாய், யாழ்ப்பாணம், நாவாந்துறை, ஊடாக குருநகர் வந்தடையும் இங்கு பிற்பகல் ஒருமணிக்கு அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றபின் பாசையூர் அரியாலை, நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில் சந்தி, தாவடி, மருதனாமடம், ஊடாக மானிப்பாய் மெமோறியல் கல்லூரியை அடைந்து அங்கு பிற்பகல் 3 00 மணிக்கு அஞ்சலிக் கூட்டம் நடாத்தப்படும் பின்னர் சுதுமலை வீதியூடாக கோண்டாவில் சந்தியை அடைந்து கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக்கல் நாட்டப்படும்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் குடாநாடெங்கும் மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா கடற்படையின ருடனான மோதலில் வீரச்சாவடைந்த கடற்புலிவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக யாழ் குடாநாடு எங்கும் தோரணங்கள் கட்டப்பட்டுள்ளன வீதிகளிலும் வாகனங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன சோக இசைகளும் ஒலிபரப்பப்பட்டது

## ஜனாதிபதி வேட்பாளர்யார்? சு. க. கூட்டத்தில் ஆராய்வு

(கொழும்பு)

சுதந்திரக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் நாளை சுட்சித் தலைமை அலுவலகத்தில் நடைபெற இருப்பதாகவும் இக் கூட்டத்தில் தலைமைப் போட்டி ஏற்படும் வாய்ப்பு அதிகமாக இருப்பதாகவும் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

சுதந்திரக் கட்சியின் தலைவியாகவும், பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

18.5.94 அன்று கிளிநொச்சியில் இருந்துயாழ் வரும்போது, கிளாலிப்படகில் செங்கதாரன் கலாவதி என்பவருடைய காசு 30,000/- ரூபாவும், அனுமதிப் பத்திரமும் (பாஸ்) அ. அட்டையும், (537823 119V) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும். (8349)

### விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதியில் ரயில்வே கடவைக்கருகில் மூன்று கடைகளுடன் கூடிய மேல் மாடிக் கட்டடம் விற்பனைக்கு உண்டு தொடர்பு- V. S. கனகரத்தினம், வீரபத்திரர் ஒழுங்கை, கல்வியங்காடு. (8350)

### இறைச்சிக் கோழி

புறொயிலர்கள், இறைச்சிச் சேவல்கள், இரண்டரைமாத Lohmann Brown பேடுகள், தடுப்பூசி இடப்பட்ட ஒரு மாத கறுப்புவெள்ளை சேவல்குஞ்சுகள், உயர்இன அடைமுட்டை விற்பனையாகிறது. அன்னை பூபதி கலையரங்க அருகில் யாழ் வீதி உரும்பராய்ச்சந்தி. (8343)

### சுருக்கெழுத்தாளர் பயிற்சி

மாதாந்த ஊக்குவிப்புத் தொகை ரூபா 450/- வழங்கப்படும் பொது அலுவலகங்களில் செயன்முறைப் பயிற்சியுடன் கூடியது நேர்முகப் பரீட்சை 24 5-94-ல் நடைபெறும் மேலதிக விபரங்களுக்கு வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம், வதிரி என்ற முகவரியுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்:- செயலாளர். (8332)

### கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

சிவப்பு, சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு, ''மல்லிகாபதி'' மானிப்பாய். (8333)

### காணி விற்பனைக்கு


நாவற்குளி சந்தியில் இருந்து அரைமைல் தூரத்தில் கேரதீவு றோட்டுக்குஅண்மையில்குடியிருப்புக்கும் தோட்டச் செய்கைக்கும் உகந்த காணியும் அத்துடன் இணைந்த நெற் செய்கைக்காணியும் மொத்தம் 28 பரப்பு உடன் விற்பனைக்குண்டு தொடர்பு:- சி. பொன்னுத்துரை, கேரதீவு றோட் நாவற்குளி, கைதடி. (சி, 8345)

### சிகை அலங்கரிப்பாளர் தேவை

குருநகரில் முன்னணியில் இருக்கும் சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றிற்கு இளம் சிகை அலங்கரிப்பாளர் (தொழில் திறமையுள்ள) உடன் தேவை. நேரில் வரவும் மயூரா சிகை அலங்கரிப்பு நிலையம் கடற்கரை வீதி, [ஆஸ்பத்திரி முன்பாக] குருநகர் யாழ்ப்பாணம். (சி, 9477)

# எங்கள் தேசத்தின் சுதந்திர சிற்பிகள்





19.05.1994 அன்று இரவு 8-30 மணியளவில் பருத்தித் துறைக் கடற்பரப்பில் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் சிறிலங்கா கடற்படை சண்டைக் கப்பல்களுடனான திடீர் மோதலின் போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட

கடற்புலி:-
**மேஜர் வசந்தன்**
**(சித்திரவேல் ரவி)**
சல்லி, திருகோணமலை
பிறந்த திகதி 6 - 7 - 1972

கடற்புலி :-
**கப்டன் புரலவன்(குகா)**
**(செல்வரட்ணம் முருகமூர்த்தி)**
சுப்பர்மடம் பருத்தித்துறை
பிறந்த திகதி 23 - 12 - 1974







## நினைவு கூருகின்றோம்...
## 22.05.1994

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா-தாண்டிக்குளம் பகுதியிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட மன்னார் - மடுவைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1988ஆம் ஆண்டு யாழ் - கந்தரோடையில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது விழுப்புண்ணடைந்த நிலையில் தன்னைத் தானே சுட்டு வீரச்சாவெய்திய,

**லெப் எட்றிச்-கிவெள்ளை** (சுந்தரம் கனகசுந்தரலிங்கம் - சுன்னாகம் தெற்கு - யாழ்)

1989ஆம் ஆண்டு மணலாறு - நெடுங்கேணி ஆயிலடிப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதசக்திகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**அகிலன்** (சுப்பிரமணியம் நாகேந்திரன் - ஆயிலடி, நெடுங்கேணி - மணலாறு)

யாழ்- மந்துவில் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**மைக்கைக்/செந்தில்** (கனகரத்தினம் சிறிகாந்தன் - பிள்ளையார் கோயில் - சாவகச்சேரி)

யாழ்-கரவெட்டி, கப்புது வெளிப்பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**வள்ளுவன்** (தம்பு ரதிநாதன் - மத்தொனி கரவெட்டி-யாழ்)

**அருள்** (யாக்கோப் பெஞ்மின் வில்லியம் ஜீவஅருள்தாஸ்- உச்சில் ஒழுங்கை, கரவெட்டி யாழ்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-9476)

தமிழீழ இசை வானில் -
பல புதிய இசைக் கோலங்களுடன் பவனி வருகிறாள்
அன்றும்! இன்றும்!! என்றும்!!!
புகழ் வாய்ந்த
**'பாடு நிலா'**
-: இசைக்குழு :-
உங்கள் மனம் கவர் வைபவங்களுக்கு அழைத்து மகிழ
ஜே. மகேந்திரா
17, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு:
**ரட்ணம் அழகுச்சோலை**
31 A, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்.
(8328)

## வார்த்தைகள் வலுவிழந்து போன - ஒரு ஆற்ற முடியாத துயரம்





கடற்புலி:-

**மேஜர் மேனன்**

**(முருகேசு ஜெகதீஸ்வரன்)**

உவர்மலை திருகோணமலை

பிறந்த திகதி 12 - 1 - 1972

கடற்புலி:-

**கப்டன் சாமந்தி (சஞ்சிகா)**

**(தங்கராசா, சுதர்ஷினி)**

சிவன் வீதி உரும்பிராய்



கடற்புலி:

**கப்டன் கணேஸ்**

**(சோமசுந்தரம் ரவிச்சந்திரன்)**

டச்சுவீதி, மானிப்பாய்

பிறந்த திகதி 4 - 2 - 1967



கடற்புலி :-

**மேஜர் குணா (சான்ஸ்)**

**(திருநாவுக்கரசு நமசிவாயம்)**

ஊரணி காங்கேசன்துறை

த. முகவரி: புலோலி இழக்கு

சிவன் கோவிலடி பருத்தித்துறை

பிறந்த திகதி 24 - 10 - 1976

# இவர்களுக்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்



கடற்புலி:

**கப்டன் மணாளன்**

**(குலசேகரம் ஸ்ரீரஞ்சன்)**

பெரியகுளம் 6ஆம் கட்டை

திருகோணமலை

பிறந்த திகதி 5 - 5 - 1972

விடுதலைப் புலிகளின்

கடற்புலிகள்

அரசியல்துறை,

யாழ். மாவட்டம்

"புலிகளின் தாகம்

தமிழீழத் தாயகம்"

(8357)



## ...மரர் து.நித்தியானந்தன்

**[நித்தி அண்ணர்]**

தமிழீழ விடுதலைப் போராட்டததை நெஞ்சில் சுமந்த
- நெடு மனிதன்.

தமிழீழ விடுதலைப் புலிகளை என்றும் ஏற்று
- நின்ற ஒரு புனிதன்.

அன்னாரின் பிரிவால் துயருறும் எல்லோருடனும் விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும் இணைந்து கொள்கின்றது;

காலத்தால் அழியாத நித்தி அண்ணர் நினைவுடன்......

இனியும் தொடரும் எம்பணி.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்;

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

நடுவப்பணியகம், தமிழீழம்.

(8358)

## கண்ணீர்க் காணிக்கை

ஒலி - ஒளி நிபுணன்

உயர் தனி மனிதன்

பழகுதற்கு இனியன்

பார்ப்பதற்கு எளியன்

**து. நித்தியானந்தன் (நித்தி)**

அவர்களின் எதிர்பாராத மறைவு கேட்டு கலையுலகம் கண்ணீர் வடிக்கிறது; அவர் பிரிவால் ஆறாத் துயருறும் மனைவி, மக்களுக்கு எமது ஆழ்ந்த அநுதாபம் உரியது.

- இளங்கலைஞர் மன்றம்

நல்லூர். (சி-9486)

# விளையாட்டு அரங்கு

நிர்மலன்

## கிரிக்கெட் விளையாட்டின் வரலாற்று நாயகன் பிறைன் லாறா

80களின் பிற்பகுதியில் தொடங்கி இன்றுவரை கிரிக்கெட் வரலாற்றில் குறிப்பிடத்தக்க காலகட்டமாக அமைகின்றது என்றே குறிப்பிடலாம். சுனில் கவாஸ்கர் அதிக எண்ணிக்கை பெற்ற டொன் பிராட்மனின் சாதனையை முறியடித்தமை, அதனைத் தொடர்ந்து அலன் போடர் கவாஸ்கரின் சாதனையை முறியடித்தமை, பந்து வீச்சில் சேர் றிச்சட் ஹட்லி அதிகூடிய விக்கெட்டுக்களைக் கைப்பற்றியமை, குறுகிய காலத்திலேயே அதனை கபில்தேவ் முறியடித்தமை என அடுக்கிக்கொண்டே போகலாம். இன்னொரு வகையிலும் இக்காலகட்டத்தை மதிப்பிடலாம் முன்னைய காலங்களில் அறிந்த பெயர்கள் படிப்படியாகப் பிரசித்தி பெற்று புகழேணியில் ஏறிச் சென்றமை அவதானிக்கத்தக்க அம்சமாகக் காணப்பட்டது. ஆனால் இன்று வீரர்கள் தம் மிக இளம் வயதில்புயலாக நுழைந்து இது எப்படிச் சாத்தியமாகும்? என்று அதிர்ந்து நிற்கும் அளவிற்கு பிரகாசிப்பது இத்தகையவர்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே இத்தகையவர்களில் முதன்மையானவர் சச்சின் டெண்டுல்கார் அடுத்ததாகக் குறிப்பிடத்தக்கவர் மேற்கிந்திய கிரிக்கெட்வீரர் பிறைன் லாறா இந்த வரிசையில் விநோத் காம்ளி.மைக்கல்ஸ்லேட்டர், பஸீட் அலி, சிவநரெய்ன் சந்தர்பால் போன்றோரையும் சேர்த்துக் கொள்ளலாம்.



பிறைன் லாறா அண்மையில் ஆச்சரியத்துடன் தம்மைப் பார்க்கச் செய்த இளம் விளையாட்டு வீரர் டிரினிடாட் நாட்டைச் சேர்ந்த லாறா பிராந்திய கிரிக்கெட் விளையாடும் காலத்திலேயே எதிர்கால மேற்கிந்திய அணித் தலைவர் என்று நிச்சயிக்கப்பட்டவர். இவரது மிகவேகமான பந்துத்தடுப்பு கிரிக்கெட் நேர்முக வர்ணனைகளில் பெரிதும் எடுத்துப் பேசப்பட்டது. இவரது துடுப்பாட்டத் திறமை என்றும் கணிக்கப்படவே செய்தது. இருந்தும் டெஸ்ட் போட்டியொன்றில் மிகக் கூடுதலான ஓட்டம் பெற்ற ஆட்டக்காரர் என்ற பெயரை இவ்வளவு விரைவில் இவர் பெற்றுக் கொள்வார் என்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது

இங்கிலாந்திற்கெதிரான ஐந்தாவது டெஸ்ட் போட்டி அன்டீகுவாவில் ஆரம்பித்த போது இத்தகையதொரு சாதனையை யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். '117 வருட டெஸ்ட் போட்டிகளில் அற்புதமான ஆட்டம் என்கிறார்' கிரிக்கெட் விமர்சகர் டெட்கொபெட் வழக்கமான இல 3 ஆட்டக்காரராக லாறா நுழைந்தபோது ஓட்ட எண்ணிக்கை இரண்டு விக்கெட் இழப்பிற்கு 12 ஓட்டங்கள் இத்தகைய தடுமாற்றமான நிலையில் உள்நுழைந்த லாறா 375 ஓட்டங்கள் பெற்றது எவ்வாறு இது ஒரு தகுதியான சாதனையா என்று வினா எழுப்புவதுடன் விடையும் தருகிறார்கள் கிரிக்கெட் தொடர்புபட்டவர்கள். இந்த ஆட்டத்தின் இங்கிலாந்து விக்கெட் காப்பாளர் ஜக்றசல் கூறுகிறார் 'நாங்கள் எதுவித பிழையும் அற்ற ஆட்டத்தைப் பார்த்தோம் அது மட்டுமல்ல அது ஒரு பூரணத்துவமான ஆட்டமும் கூட' மேலும் கூறுகையில் 'நாங்கள் இவர் ஆட்டமிழந்தாரா என்ற கேள்வியை சத்தமிட்டு எழுப்பியமை விரக்தி நிலையிலேயே' என்கிறார்.

லாறா தன் சாதனை எண்ணிக்கையில் யார் யாரை முந்தியுள்ளார்? ஒருவர் இங்கிலாந்து வீரர் லென். ஹட்டன் இவர் குவித்த ரன்கள் 364 ஆனால் டெஸ்ட் தகுதி வாய்ந்த இரண்டு அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர்களையே இவர் சந்தித்தார் அடுத்த வீரர் சேர் காபீல்ட் சோபர்ஸ் இவர் 1958இல் பாகிஸ்தானுக்கு எதிராக 365 ஓட்டங்கள் பெற்றார். அவ்வேளையிலும் பாகிஸ்தான் பந்து வீச்சாளர்கள் மிகத் திறமை வாய்ந்தவர்கள் அல்ல என்று கருதப்படுகின்றது.

பிறைன் லாறா தன் சாதனையை அண்மித்துக் கொண்டிருக்கையில் சோபர்ஸ் தன் சாதனையை முறியடிக்கப் போகும் இளைஞனுடன் கைகுலுக்கிப் பாராட்டுத் தெரிவிக்கத்தயாராகிக் கொண்டிருக்கிறார். பிரபல கிரிக்கெட் வர்ணனையாளர்கள்; மேற்கிந்தியாவைச் சேர்ந்த டோனி கோசியர் மற்றும் கிறிஸ்தோபர் மாட்டின் ஜென்கின்ஸ் வர்ணனையை ஆரம்பிக்க தயாராகிறார்கள். இது என்ன ஒரு வரலாற்று நிகழ்வா என்கிற வினா வொன்று எழுகின்றது. மிக அவதானமாக லாறாவின் ஒவ்வொரு அசைவையும் அவதானித்துக்கொண்டிருக்கும் முன்னை நாள் மே. இந்திய அணித்தலைவரும் 3ஆம் இலக்க ஆட்டக்காரருமான - பிறைன்லாறாவும் 3ஆம் இலக்க ஆட்டக்காரர் - விவியன் றிச்சர்ட்ஸ் கூறுகிறார் ''நாம் ஒரு வரலாற்றைத்தரிசித்துக் கொண்டிருக்கிறோம்'' லாறை 366 ஓட்டங்கள் பெற்றதும் அதன் பின் நிகழ்ந்தனவும் அவரை ஆனந்த அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும் பெரும் தொகைப் பணப் பரிசில்கள், கார், இலவச விமானப் பயணங்கள்... இப்படியாகத் தொடர்கின்றன. ஒரு இளைஞனின் சாதனைக்குக் கிடைத்த அங்கீகாரம் இது. எல்லாவற்றையும் விட மேலானது உலகக் கிரிக்கெட் ரசிகர்களின் மனதில் அவர் பிடித்துக் கொண்ட இடம்தான் இந்தச்சாதனை இலகுவில் முறியடித்துவிடக் கூடியதா என்பதை எதிர்காலம் தான் கணித்துக் கொள்ள வேண்டும்.

## உலக கோப்பை கிரிக்கெட் - 1996 புதிய நாடு ஒன்றின் பிரவேசம்

அடுத்த உலகக்கிண்ண ஒரு நாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகள் 1996-ல் நடைபெறவுள்ளன. வழமையான டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற நாடுகளுடன் இன்னொரு ஐ.சி.சி அங்கத்துவ நாடும் உலகக்கிண்ணப்போட்டிக்கு தெரிவுப் போட்டிகளின் மூலம் தகுதிபெறுவது வழக்கம் இந்த வகையில் ஐ. சி. சி அங்கத்துவம் பெற்ற 20 நாடுகள் உள்ளன. அந்த இருபதாவது நாடு எது என்பது ரசிகர்களுக்கு ஆர்வத்தைக் கொடுப்பதாக இருக்கும். அதுவே ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகும் இதில் இன்னும் சுவையான செய்தி நீண்டகாலம் கிரிக்கெட் ஆடி வந்த நாடுகளை யெல்லாம் தோற்கடித்து ஐ. சி. சி. கிண்ணத்தை ஐ அ. எமிரேட்ஸ் தட்டிக்கொண்டமையாகும்.

இம்முறை ஐ சி.சி போட்டிகள் கென்யா நாட்டின் நைரோபியில் நடைபெற்றன போட்டிகளின் முன்னரே வங்காள தேசம் இலகுவாக வெற்றிபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது இருந்தும் ஐ.அ எமிரேட்ஸ் வெற்றிகொண்டது சகலரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கி இருக்கின்றது வங்காளதேசம் இல்லாவிட்டாலும் கூட கென்யா அல்லது ஒல்லாந்து வெற்றிக்கிண்ணத்தைத் தட்டிச் சென்றிருக்கவேண்டும் அதுவும் நடைபெறவில்லை.

ஐ அ எமிரேட்ஸ் திடீரென்று ஒரு வீச்சுடன் முன்னணிக்கு வந்தது எவ்வாறு? அணிக்கு அனுமதிக்கப்பட்ட 16 வீரர்களுள் தலைவர் சுல்தான் சர்வானி மட்டுமே இந்த நாட்டின் குடிமகனாவார். ஏனைய எல்லோரும் தொழில் நிமித்தம் இங்கு வந்து குடியேறியோர் ஆவர். கூடுதலாக இந்தியர், பாகிஸ்தானியர், இலங்கையர் முதலியோர் இக்குழுவில் அங்கத்தவர்களாக உள்ளனர். இவர்கள் அநேகமாக தம் சொந்த நாடுகளில் மிகத் திறமையாக பிராந்திய அல்லது இளவயது அணிகளில் விளையாடியவர்கள் ஆவர். தம்நாட்டில் மேலெழச் சந்தர்ப்பம் பெறாத இவர்கள் இன்று ஐ அ. எமிரேட்சில் சோபிக்கிறார்கள். ஐ. அ. எமிரேட்சின் வெற்றியை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளத் தயக்கம் காட்டியவர்கள் கென்யா அணியினர் ஆவர் ''குறைந்தது சிலராவது அந்தந்த நாட்டுப் பிரஜைகள் அந்தந்த நாட்டு அணிகளில் விளையாட வேண்டும்'' என்று கென்ய அணித் தலைவர் ஆதங்கப்பட்டுக் கொள்கிறார். ஆனால் இதில் எதுவித நீதியீனமும் ஏற்பட்டுவிடவில்லை என்றும் பொதுச் சட்டப்படி 4 வருடம் 218 நாட்கள் ஒருவர் குறிப்பிட்ட நாட்டில் வசித்தால் அவர் விளையாடத் தகுதியுடையவர் ஆகிறார் என்கிறார் சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவர்.

இந்தியாவின் சர்வதேச கிரிக்கெட் ஆடிய வீரர்களும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியவர்கள். ஐக்கிய அரபு எமிரேட்சின் பயிற்றுனர் முன்னைநாள் இந்திய வேகப்பந்து வீச்சாளர் மதன்லால், அதே போல் ஹனுமன்ட்சிங் கென்யாவின் பயிற்றுனர். வங்காள தேசத்தின் பயிற்றுனர் மொகிந்தர் அமர்நாத் குறிப்பாக இந்திய பாகிஸ்தானிய கிரிக்கெட் வளம் ஐ. அ. எமிரேட்சில் கூடுதலாகக் குவிவதை அவதானிக்க முடிகின்றது. இந்தப் புதிய நாட்டின் கவர்ச்சிக்கு இன்னொரு காரணமும் இருக்கக்கூடும். இந்த நாடு எண்ணெய் வளம் கொழிக்கும் நாடாக இருப்பதே அதுவாகும் தம் திறமைக்குக் களமும், அதற்கு பெரும் சன்மானமும் கிடைக்கும் இடத்தை நாடி உபகண்ட இலங்கை வீரர்கள் செல்லக்கூடும். ஆகக் குறைந்தது முதல்தர ஆட்டக்காரர்களையாவது இந் நாடு கவர்ந்திழுக்கும்.

1996 உலகக் கிண்ணப் போட்டிகள் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை நாடுகளில் நடைபெறும்போது ஐ. அ. எமிரேட்சின் பிரவேசம் ரசிகர் மத்தியில் ஒரு கதம்ப உணர்வை ஏற்படுத்தும் என்பது மட்டும் நிச்சயம்.

ஈழநாதம் மக்கள் தினசரியில் இனி வரும் ஞாயிற்றுக்கிழமைதோறும் 'விளையாட்டு அரங்கு' என்னும் பகுதி இடம் பெறும் என்பதை வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். இதில் சர்வதேச உள்ளூர் விளையாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டு வீரர்களின் சாதனைகள் பற்றிய குறிப்புக்களும், விளையாட்டு தொடர்பான பல்வேறு விடயங்களும் இடம்பெறும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இதில், ஆர்வம் உள்ளவர்கள் தங்கள் ஆக்கங்களையும் அனுப்பி வைக்கலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

கொள்ளை நோய்தடுப்பூசி

பல்களை பொருள்களை

பாதாளஉலககுற்றவாளிமீது

## கொன்ளை நோய்தடுப்பூசி கோழிகளுக்கு ஏற்றப்பட்டது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர், கால்நடை சுகாதார திணைக்களத்துடன் இணைந்து யாழ். மாவட்டத்தில் கடந்த சித்திரை மாதத்தில் மட்டும், 69574 கோழிகளுக்கு கொள்ளை நோய் தடுப்பூசிகள் போட்டுள்ளனர்.

கோழி கொள்ளை நோய் அல்லது றனிக்கற் எனப்படும் கோழி நோய் ஒரு வைரசினால் உண்டாகின்றது.

இந்த நோயினால் பாதிக்கப்பட்ட, கோழிகள் வித்தியாசமான கழிச்சல், தூங்குதல், உணவு உண்ணாமை ஆகிய குணம் குறிகள் காணப்பட்டு பின்னர் இறக்கக் கூடும். தற்செயலாக தப்பும் கோழிகளும் பின்னர் ஆரோக்கியமற்றதாகவே காணப்படும்.

தடுப்பூசியை போடுவதன் மூலம் இந்த நோய் வராமல் தடுக்கமுடியும், 21-ம் நாள் பருவத்திலும் $3\frac{1}{2}$ மாத பருவத்திலும் இரண்டு முறை கொள்ளை நோய் தடுப்பூசியை போட்டு இந் நோய் வராமல் தடுக்கமுடியும்.

மேலதிக விபரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செயலகங்களிலும், மிருக வைத்தியரிடமும் பெற்று உங்கள் கோழிகளுக்கு தடுப்பூசியை போட்டு பாதுகாக்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பு ஒன்றின் மூலம் கேட்டுள்ளது.

## பாதாள உலகத்தார் கைதை உடன் நிறுத்தக் கோரிக்கை

(கொழும்பு)

பாதாள உலக குற்றவாளிகளைப் பிடிக்க அரசாங்கம் எடுத்துள்ள முடிவினால் பதற்றம் அடைந்துள்ள குற்றவாளிகள் அமைச்சர் சிறிசேன கூரேயைச் சந்தித்து இந்நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும்படி கோரியுள்ளனர்

இவ்வாறு செய்யத் தவறினால் அரசாங்கத்தி லுள்ள பெரும் புள்ளிகளின் தேவைக்காக தம்மால் கொல்லப்பட்டவர்களின் பட்டியலை வெளியிடப் போவதாக எச்சரித்துள்ளனர்.

## வடக்கேபற்றறி எடுத்துவந்த லொறிச்சாரதி கைது

(கொழும்பு)

வடபகுதிக்கு சென்று கொண்டிருந்த லொறி ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பற்றறிகள் கைப்பற்றப்பட்டதாக சிறிலங்கா இராணுவத்தினர் தெரிவிக்கின்றனர்.

வடபகுதிக்கு பொருள்களைக் கொண்டு செல்லும் இந்த லொறியில் அத்தியாவசியப் பொருள்கள் மத்தியில் முப்பதுக்கு மேற்பட்ட பற்றறிகள் மறைத்து வைத்திருந்தமை சிறிலங்கா இராணுவத்தினர் நடத்திய சோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் மேற்படி வாகனத்தின் சாரதியும், மற்றுமொருவரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# பல்கலை. பொருள்களை தடையின்றி வழங்குக

### துணைவேந்தர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்துக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கு தடையின்றி அனுமதி வழங்கும்படி பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவிடம் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் குணரட்ணம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவுக்கு துணைவேந்தரினால் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரிலேயே இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக யாழ். பல்கலைக் கழகத்துக்குத் தேவையானகாகிதாதிகள், எரிபொருட்கள், கல்வி உபகரணங்கள் மற்றும் ஏனைய அத்தியவசியப் பொருள்களை கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதில் பல சிரமங்கள் எதிர் நோக்கப்பட்டு வருகின்றன. அனுமதி வழங்கும் விடயத்தில் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு அதிகாரிகளும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அதிகாரிகளும் கெடுபிடிப்போக்கை கடைப்பிடிப்பதுடன் இழுத்தடிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதைத் தொடர்ந்தே துணைவேந்தர் குணரட்ணம் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவிடம் மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளார். (க)

## மெய்வல்லுநர் போட்டிகள்

வேலணை, ஊர்காவற்றுறை பிரதேசசெயலகபிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிற்கு இடையேயான மெய் வல்லுநர் போட்டிகள் இவ் வருடம் வழமைபோல் நடைபெற உள்ளதால் பங்குபற்றும் விளையாட்டுக் கழகங்களிற்குரிய பொறுப்பாளர்கள் தங்கள் பிரிவு கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு விளையாட்டுப் போட்டிக்கான பட்டியற் படிவத்தினை இன்று முதல் பெற்று பூர்த்தி செய்து வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன் உரிய கிராம அலுவலரிடம் திருப்பி ஒப்படைக்குமாறும் 27ஆம் திகதி காலை 10.00 மணிக்கு தற்பொழுது சுபாஸ் விடுதியில் இயங்கும் பிரதேச செயலகத்தில் நடைபெறவிருக்கும் கலந்துரையாடலில் சகல விளையாட்டுக் கழக பொறுப்பாளர்களும் கலந்து கொள்ளுமாறும் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. திலகநாயகம் போல் அவர்கள் கேட்டுக் கொள்கிறார்கள்.

### க. பொ. த (சா/தர) செய்முறை

## பரீட்சைகள் அடுத்த மாதம் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் 1993ஆம் ஆண்டு க. பொ. த (சா/தர) பரீட்சையின் செய்முறைப்பரீட்சை அடுத்த மாத நடுப்பகுதியில் நடாத்தப்படவுள்ளதாக யாழ் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இச் செய்முறைப் பரீட்சைக்கான சகல காகிதாதிகள், வினாத்தாள்கள், மற்றும் அனுமதி அட்டைகள் என்பன யாழ் கல்வித் திணைக்களம் வந்து சேர்ந்துள்ளமை நீங்கள் அறிந்ததே.

எனினும் இச் செய்முறைப் பரீட்சைக்கான பரீட்சை நிலையங்கள், பரீட்சை மேற்பார்வையாளர்கள் போன்றவற்றிற்கான ஒழுங்குகள்மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் அடுத்த மாத நடுப்பகுதியிலேயே இப் பரீட்சை நடைபெறும் என வலயம்- 1 கல்விப் பணிப்பாளர் நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார். (பா)

## கருத்தரங்கு

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் சாவகச்சேரிப் பிரிவினர் க.பொ.த. உயர்தரம்-94 பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வினாவிற்கு விடையளித்தல் கருத்தரங்கு எதிர்வரும் 24-ம், 25-ம் திகதிகளில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது, இதில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் மற்றும்பலரும் கலந்து கொள்கின்றனர் இதுதொடர்பான பதிவுகளை உடன் சாவகச்சேரி செஞ்சிலுவை சங்க கிளையில் மேற்கொள்ளலாம்.

(86)

## பாதாளஉலககுற்றவாளிமீது விசாரணை எதுவுமில்லை

கொழும்பில் அண்மையில் கைதான பல பாதாள உலக குற்றவாளிகள் மீது இதுவரை எந்தவித விசாரணைகளும் பொலிசாரால் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இக்குற்றவாளிகள் குறிப்பிட்ட ஒருவரை குறிப்பிட்ட ஓர் அதிகாரி விசாரிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்ட போதிலும் இவ் விசாரணைகள் இதுவரை ஆரம்பிக்கவில்லை.

விசாரணைக்கு என அமர்த்தப்பட்ட அதிகாரிகளில் சிலர் அரசியல் வாதிகளின் கைப்பொம்மைகளாக இருப்பதே விசாரணை தாமதத்திற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. இத்தகைய அரசியல் வாதிகளின் செல்வாக்குக்குட்பட்ட அதிகாரிகளை குற்றவாளிகளை விசாரிக்க நியமித்தமை குறித்து பொலிஸ்மா அதிபர் மீது மக்கள் மத்தியில் அதிருப்தி நிலை ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## காமினி திசாநாயக்காவிற்கு ஆதரவாளர்கள் வாழ்த்து

(கொழும்பு)

தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக நியமனம் பெற்றுள்ள முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்காவிற்கு அவரது நண்பர்களும் ஆதரவாளர்களும் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

கொள்ளுப்பிட்டியிலுள்ள அவரது வீட்டில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கூடி வாழ்த்துக்களைத் தெரிவித்ததாகவும், இவர்கள் சிறிலங்காவின் பல பகுதிகளிலிருந்தும் வந்தவர்கள் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

## புடவைக் கைத்தொழில் ஈராண்டு பயிற்சிநெறி

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தினால் நடாத்தப்படும் ஈராண்டு காலப்பயிற்சி நெறி 94-96 நல்லூரிலுள்ள அரசினர் நெசவுப் பயிற்சிப் பாடசாலையில் நடைபெறஉள்ளது கணிதம், தமிழ் உட்பட க.பொ.த சாதாரண பரீட்சையில் இரு தடவைகளில் சித்தி பெற்ற இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். பயிற்சிக் காலத்தில் நாளொன்றுக்கு 30/- அலவன்சும், சீருடையும் கொடுக்கப்படும் வயதெல்லை 18-30 வயதுக்கு இடைப்பட்டவர்களாகஇருக்க வேண்டும் விண்ணப்ப முடிவு திகதி 31.05.1994 மேலதிக விபரங்களுக்குநல்லூர்நெசவுப் பயிற்சிப் பாடசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளும்படி யாழ் அரச அதிபர் கேட்டுள்ளார்.

## பிரிவுபசாரம்

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் உடற்கல்வி ஆசிரியையாகக் கடமையாற்றிய திருமதி எஸ். திருநாவுக்கரசு ஆசிரிய சேவையில் இருந்து அண்மையில் இளைப்பாறியுள்ளார்.

இக்கல்லூரி ஆசிரிய சகோதரத்துவ குழுவினர் பிரிவு உபசார வைபவத்தினைச் சிறப்பாக நடாத்தினர்.

## சேரன் பல்பொருள் வாணிபத்தின்

மற்றுமொரு சேவை யாழ். நகரில் ஆரம்பமாகிறது,

நாளை 23.05.94 நண்பகல் 11.48 இற்கு

கஸ்தூரியார் வீதியில் (நவீன சந்தை உட்புறம்)

# சேரன் காகிதாதிகள் வாணிபம்

- பாடசாலை உபகரணங்கள்
- பணிமனைகளுக்கான காகிதாதிப் பொருள்கள்
- அச்சகத் தேவைக்கான அச்சுப்பதிப்பு தாள்கள்

என்பனவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும்

பெற்றிட நாடுங்கள்:

## சேரன் காகிதாதிகள் வாணிபம்

கஸ்தூரியார் வீதி (நவீனசந்தை உட்புறம்),

யாழ்ப்பாணம்.

(சி-9480)



## தேவை (TENT)

நல்ல நிலையிலுள்ள கூடாரம் (Tent) தேவை.

தொடர்பு:-

விள. இல. 333, மே/பா, ஈழநாதம்
மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(8340)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு:
07 - 04 - 1940

உதிர்வு:
22 - 04 - 1994



**அமரர் பொன்னம்பலம் சிற்றம்பலம்**

பொதுமுகாமையாளர்
கட்டைவேலி நெல்லியடி ப நோ. கூ. சங்கம்

நீங்கள், எங்களைவிட்டுப் பிரிந்த பின்பு தான் கூட்டுறவாளர்களை எவ்வளவு நேசித்தீர்கள் என்று எங்களால் உணர முடிகிறது.

நாட்கள் நகர்ந்தாலும் உங்கள் நினைவு அகலாது.

கட்டைவேலி, நெல்லியடி,
ப. நோ. கூ. சங்கம்.

பணிப்பாளர்,
பணியாளர்கள்.

(8353)

## போட்டிகள்

புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் வித்தியாலயம் மற்றும் செட்டித்தெரு மெதடிஸ்த மிஷன் வித்தியாலயம் என்பன இணைந்து நடாத்தும் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று மாலை இரண்டு மணியளவில் கில்னர் ஒழுங்கையிலுள்ள பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் பூராசா தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலாளர் கலந்து கொள்ளவுள்ளார்.

## கொழும்பில் ஆய்வுப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் கொழும்பில் இருவார ஆய்வுப்பட்டறை ஒன்றை யூன் மாத நடுப்பகுதியில் நடத்த உள்ளது.

அரச சார்பற்ற நிறுவனம் என்றால் என்ன என்ற ஆய்வுப்பட்டறை யாழ் மாவட்டத்தில் நடாத்தப்பட்டதை தொடர்ந்து அதன் தொடர் நிகழ்வாகவே இந்த ஆய்வுப்பட்டறையை கொழும்பில் சிறுவர் பாதுகாப்பு நிதியம் நடத்த முயற்சிப்பதாக தெரிவிக்கப் பட்டது.

மேற்படி ஆய்வுப் பட்டறைக்கு யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, அநுராதபுரம் ஆகியநான்கு மாவட்டங்களை சேர்ந்த பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்தப்பயிற்சி பட்டறைக்கு யாழ் மாவட்டத்திலிருந்து மூவர் பங்கேற்க உள்ளனர்.

(சி, தி)


தமிழீழ வைப்பகம்

தமிழரின் காப்பகம்

23 - 05 - 1994 முதல்

பணியைத் தொடங்குகிறது

தமிழரின் முதலீட்டினால் தமிழீழத்தில் உருவாகும் ஒரே வைப்பகம்

# தமிழீழ வைப்பகம்

## அதுவே தமிழீழ மக்களின் சிறப்பான காப்பகம்

- உங்கள் பணிக்கென உருவான வைப்பகம்
- தேவையின்போது தோள்தரும் தோழனாக
- கை தந்து உதவவரும் மெய்யான பணியாளனாக

# "தமிழீழ வைப்பகம்"

- நடைமுறைக் கணக்கு
- தேட்டக் (சேமிப்பு) கணக்கு
- நிலையான வைப்புக் கணக்கு
- மேம்பாட்டுக் கடன்
- அடகுக் கடன்
- வாணிபக் கடன்

## இத்தனை திட்டங்களும் உங்களுக்காகவே

- வைப்புக்கு உயர்வட்டி வழங்கி
- வளர்ச்சிப் பணி கருதி எளிய கடன் வழங்கி

மக்களின் தோழனாய் மலர்கின்ற வைப்பகம்

# "தமிழீழ வைப்பகம்"

மேலும் விளக்கங்கள் பெற எமது பணியகத்தை நாடுங்கள்

**தமிழீழ வைப்பகம்,**

**கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.**

(சி-9479)

சிந்தனைக்கு

பலவீனமானவர் பாதையில் உள்ள தடைக்கல்
பலமானவர் பாதையில் படிக்கல்லாக பயன்படும்.
- தோமஸ் கார்லைல்

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 22-05-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

## உலக முன்னுதாரணமாக மாறுவோம்

எமது சமுதாயத்தில் சீதனம் என்பது பெண்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி. ஒருவகையில் அவர்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள ஒடுக்குமுறை என்றும் கூறலாம். இந்த வகையில், ''தமிழீழ சமுகத்தில் சீதன முறையானது பெண் அடிமைத்தனத்தின் வெளிப்பாடாக ஒரு சமுக அநீதியாக உருவெடுத்திருக்கின்றது. இந்த கொடுமையால் பெண்ணினம் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது" என்ற விடுதலைப் புலிகள் அரசியற் பிரிவின் கூற்று சரியானதே. இந்நிலையில் இது ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் கேள்விக்கே இடமில்லை.

ஆனால், இச்சீதனப் பிரச்சினையானது, எமது சமூகத்தில் இருந்து விரும்பியவுடன் வேரறுத்து எறியக்கூடிய சிறிய பிரச்சினையாக இல்லை. எமது சமூகத்தில் ஆழ வேரோடிவிட்ட ஒரு விஷ விருட்சம் போன்று நிற்கின்றது. இதனை அகற்றுவதென்பது எமது சமூகக் கட்டமைப்பில் பெரும் மாற்றம் ஒன்றை உருவாக்குவதன் மூலமே சாத்தியமாகும்.

சீதன முறை பெண்களை ஒரு வியாபாரப் பொருளாக்கி அவர்களின் சுயகௌரவத்தையே கேலிக்குரியதாக்குகின்றது. அதனால் இதில் தனியாக பெண்கள் மட்டும்தான் பாதிப்பிற்கு உள்ளாகின்றதென்பதல்ல. பெண்ணைப் பெற்றெடுத்த குடும்பமே பாதிப்பிற்குள்ளாகிறது. ஒட்டுமொத்தமாக சமூகமே பாதிப்புக்குள்ளாகின்றது.

இந்நிலையில், சீதனம் என்பது பெண்களுக்கெதிரான ஒடுக்குமுறை என்பதை விட எமது சமூகத்தில் புரையோடிப் போயுள்ள ஒரு சீழ்பிடித்த புண்ணாகும் என்பதே சரியாகும். இதில் இருந்து விடுபடுதல் / குணமடைதல் என்பது நமது சமூகமே விடுபட்டு, சமூக விடுதலை ஒன்றைப்பெற்றுக் கொள்வதற்கு ஒப்பானதாகும்.

இன்றைய எமது சமுதாயத்தில், சாதி, சமயம் சாத்திரம் சீதனம் என்பன ஒரு திருமண உறவை நிச்சயிப்பவையாக உள்ளன. இதில் சீதனம் என்பது ஒவ்வொரு மட்டத்திற்கும் ஏற்ப நிர்ணயிக்கப்படும் ஒன்றாகவும் உள்ளது [illegible]

# சிங்கள - முஸ்லிம்களிடையே மாத்தளையில் முறுகல்நிலை

[கொழும்பு]
முஸ்லிம் இனத்தவரான மாத்தளை மேயர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இடம் பெற்ற சம்பவங்களையடுத்து மாத்தளைப் பகுதியில் சிங்கள- முஸ்லிம் மக்களிடையே மோதல் ஏற்படும் நிலை உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து விசேட கலவரம் அடக்கும் பொலிஸ் பிரிவு அப் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இரு பகுதியினையும் சமாதானப் படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அவை எதுவும் பயனளிக்கவில்லை எனவும், சிறு சிறு அசம்பாவித சம்பவங்கள் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அப் பகுதியில் தொடர்ந்து முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு இருப்பதாகவும் வர்த்தக நிலையங்களைத் திறப்பதற்கு எடுத்த முயற்சிகள் இது வரை பயனளிக்கவில்லை எனவும் தெரியவருகின்றது.

## சலுகைகள் ஏன் முன்னரே வழங்கப்படவில்லை

**- வாசுதேவ கேள்வி**

தேர்தல்கள் எதிர்நோக்கப்படுவதால் பொருள்களின் விலைகள் குறைக்கப்படுகிறது சலுகைகள்வழங்கப்படுகிறது இவற்றை ஏன் முன்னரே செய்ய முடியவில்லை என்று நவசம சமாஜக் கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்காரகேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தேவையானது தான். இதனை முன்னரே ஏன் வழங்க முடியவில்லை இந்த நிவாரணங்களை அரசாங்கம் ஏன் இவ்வளவு காலமும் மறுத்துள்ளது என்று தான் பொருள் கொள்ள வேண்டும் என்றார்.

## ருக்மன், ரொனிடிமெல் பா. உ. களாக நியமனம்

(கொழும்பு)
முன்னாள் அமைச்சர் ரொனி டிமெல், ருக்மன்சேனநாயக்கா ஆகியோருக்கு இம் மாதம் 25-ம் திகதிக்கு முன்னதாக பாராளுமன்ற உறுப்பினர் நியமனம் வழங்கப்படவுள்ளதாக கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது, இவர்களுக்கு வழிவிடுவதற்காகதேசியப்பட்டியலிலிருந்து விலகிக் கொள்வது யார் என்று இதுவரை தெரியவரவில்லை,

இதேவேளை சிறிலங்கா பாராளுமன்றத்தில் பல புதிய முகங்கள் நியமனம் பெற இருப்பதாகவும் இதற்காக தற்போது தேசிய பட்டியல் உறுப்பினர்களுடன் ஐ தே. கட்சிப் பொதுச்செயலாளர் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுவருவதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது ஐ. தே. க- தேசியப் பட்டியல் உறுப்பினர்களுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளதாகவும் இதனைத் தொடர்ந்து இவர்கள் தமது உறுப்பினர் பதவிகளை இராஜினாமா செய்வார்கள் எனவும் அக் கட்சி வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

மேலும் இரு சிரேஷ்ட அரசியல் வாதிகளுக்கு தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றம் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஐ. தே. க. தலைமைக காரியாலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சில கட்சிகளை தம்முடன் இணைத்துக் கொள்வதற்காக இம் முயற்சியை தமது கட்சி மேற்கொளவதாகவும் சிரேஷ்ட ஐ தே க உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்-

## பிறப்பு இறப்புச் சான்றிதழ் எம்மொழியிலும் பெறலாம்

(கொழும்பு)
பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுச் சான்றிதழ் பத்திரங்களை கொழும்பு பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய எந்த மொழியிலும் பெற்றுக்கொள்ளலாம் என பதிவாளர் நாயகம் கே ஏ குணரத்தின தெரிவித்துள்ளார்.

பிறப்பு. இறப்பு விவாகப் பதிவுகளை நாட்டின் எந்த மொழியில் பதிவுசெய்திருந்தாலும் அதன் மூலப் பிரதிகளை மேற் குறிப்பிட்ட மூன்று மொழியில் வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளலாம் என தெரியவருகின்றது.

## மீண்டும் சு. கவில் சேர அமைச்சர் அனுரா முயற்சி

உயர் கல்வி அமைச்சர் அனுரா பண்டார நாயக்கா மீண்டும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைவது தொடர்பான பூர்வாங்க முயற்சியில் ஈடுபட்டு வருவதாக ''ராவய'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சுதந்திர கட்சித்தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் அண்மையில் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டதாகவும் அவர் கட்சி பொது செயலாளருக்கு முறைப்படி விண்ணப்பம் அனுப்புமாறு கேட்டுக் கொண்டதாகவும் தெரியவருகின்றது.

தான் எதிர் பார்த்த விடயங்களை ஐக்கிய தேசியக் கட்சியினர் நிறை வேற்றத் தவறியதினால் அனுரா மனத்தாங்கல் அடைந்து காணப்படுவதாக மேலும் தெரியவருகின்றது.

# காமினி திசாநாயக்காவிடம் கூரே கூறிய இரகசியச் செய்தி என்ன?

(கொழும்பு)
காமினி திசாநாயக்காவுக்கு அமைச்சர் சிறிசேன கூரே இரண்டு நிமிடங்களில் கூறிய இரகசியச்செய்தி என்ன என்பது தொடர்பாக கொழும்புப் பத்திரிகையளர் மத்தியில் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

அண்மையில் பாராளுமன்றத்திற்கு பதவி ஏற்பதற்காக காமினி திசாநாயக்கா வருகை தந்த போது சிறிசேன கூரே இவரது தோள் மீது கையை வைத்தபடி மிக நெருக்கமான நிலையில் காமினி திசாநாயக்காவின் காதுக்குள் ஏதோ கூறியபடி சென்றார், அதனைக் கேட்டு சிரித்தபடி காமினி நடந்து சென்றார் என்பதும் தெரிந்ததே அந்த நேரத்தில் சிறிசேன கூரே கூறியது என்ன?

இது தொடர்பாக காமினி திசாநாயக்காவிடம் பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பிய போது தற்போது எதுவும் கூற முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

இது போன்றே சிறிசேன கூரேயிடம் கேட்ட போது காமினியிடம் கேட்டுக் கொள்ளுங்கள். நான் கூறியது காமினிக்கு மட்டுமே அவர் விரும்பினால் உங்களுக்கு தெரிவிக்கட்டும் எனப் பதிலளித்துள்ளார்.

நீர் பாராளுமன்றத்திற்கு வருவதற்கு பாதையை செப்பனிடும் பொருட்டு எனது கட்சிச் செயலாளர் பதவி பறிக்கப்பட்டது. மற்றும் பல உறுப்பினர்கள் பதவி விலகுமாறு வற்புறுத்தப்பட்டுள்ளனர். எனவே நீர் எதிர்த்த பாராளுமன்ற ஜனநாயகத்தை எதிர்பார்த்து அன்று கட்சியிலிருந்து வெளியேறி வீரோ அதற்கு எதிரான முறையில் தான் இன்று இங்கு வந்துள்ளீர் என சிறிசேன கூரே கூறி இருக்கக் கூடும்.

அல்லது அன்று நீரும் ஏனையோரும் பாராளுமன்றத்திற்கு கொண்டு வந்த திட்டத்தை அடுத்து நான்உடனே திரும்பிவந்து உம்மோடு கதைத்தேன் அன்று நீர் சற்று பொறுமையாக இருந்திருக்கலாம் அல்லது நீண்டகாலமாக அமைச்சர் பதவியை எதிர் பார்த்துள்ள உமது ஆசை விரைவில் நிறைவேற போகின்றது எனத் தெரிவித்து இருக்கலாம் எனச் செய்தியாளர் கருதுகின்றனர்.

## யாழ். பல்கலைக் கழகத்தில் பொறியியல்பீடம் அமைக்க மானியக்குழு பின்னடிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தை ஆரம்பிப்பதற்கான அனுமதியை வழங்குவதற்கும் இவ்விடயம் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பல்கலைக்கழக மானியங்கள் [illegible]

என்பதையே இது காட்டுகிறது என்றும் கருத்து தெரிவிக்கப்படுகிறது. (க)

புலிகளின் குரல்
நிகழ்ச்சி நிரல்

## வழங்கப்படும்

கண் பார்வை அற்றவர்களுக்காக கொழும்பிலிருந்து அரசசார்பற்ற நிறுவனங்களால் எடுத்துவரப்படும் பொருள்கள் வாழ்வகத்திற்கு வழங்கப்பட உள்ளதாக அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றிய தலைவர் தெரிவித்துள்ளார்.

கண்பார்வை அற்றவர்களுக்கான கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் வாத்திய இசைக் கருவிகள் தட்டச்சு இயந்திரங் [illegible]

## வட-கிழக்கு பிரச்சினையை யுத்தத்தில் தீர்க்க முடியாது

**- விமலரட்ணதேரோ**

[கொழும்பு]
வடக்கு - கிழக்கு பகுதியில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை யுத்தத்தினால் தீர்க்க முடியாது, தீர்வுக்காக நாம் ஆயுதங்களில் கொண்டுள்ள நம்பிக்கையை முதலில் நிறுத்த வேண்டும் எனக் கலாநிதி [illegible]

நாடும் வெற்றி பெற்றது கிடையாது இதனால் நாடுகள் அழிந்து காணப்படுவதை நாம் காண்கின்றோம்.

தொடர்ந்து தெரிவிக்கையில் அதிகார பகிர்வு நாட்டில் மேலும் ஓர் ஒற்றுமை தன்மையும், [illegible]

என்பது ஒவ்வொரு மட்டத்திற்கும் ஏற்ப நிர்ணயிக்கப் படும் ஒன்றாகவும் உள்ளது. சுருக்கமாகக் கூறுவதானால் நிச்சயிக்கப்படும் திருமணங்களின் மையப் பொருள்களாக இம் மூன்றும் உள்ளன. இந்நிலையில் 'திருமண உறவை' மற்றவர்கள் நிச்சயிக்கும் சமூகக் கட்டமைப்பில் மாற்றம் ஏற்படும்வரை சீதனத்தை ஒழிப்பதற்கு கடும் போராட்டம் நடத்தியே ஆக வேண்டும். இப்போராட்டம் சீதன்த்திற்கு மட்டும் எதிரானது என்பதை விட பெண்கள் மீதான ஒட்டுமொத்த அடக்குமுறைக்கு எதிரானதாக அமைதல் வேண்டும். அப்பொழுது சீதனக் கொடுமையில் இருந்து பெண்கள் விடுபட முடியும்

ஆகையால், சீதனக் கொடுமைக்கு எதிரான போராட்டம் என்பது சமூகத்தின் விழிப்புணர்வுடனும், சமுதாய மாற்றத்துடனும் நெருங்கிய தொடர்புடையது. அதில் ஏற்படும் மாற்றமே பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதியில் இருந்து அவர்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுக்கக் கூடியதாகும்;

இந்தவகையில், சீதனம் தொடர்பாக மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியாக விடுதலைப் புலிகள் அரசியற் பிரிவினர் ஆரம்பித்துள்ள சீதனத்திற்கு எதிரான 'பிரசார இயக்கமானது' வரவேற்கத் தக்கதாகும். இப்பிரசார இயக்கம், சீதனக் கொடுமைக்கு எதிரான கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதோடு, சமூக விழிப்புணர்ச்சிக்கும் தூண்டுகோலாக அமையக் கூடியதாகும்:

இதேசமயம் இப் பிரசார இயக்கம் ஏற்படுத்தவுள்ள விழிப்புணர்வே எதிர்காலத்தில் சீதன ஒழிப்பின் வெற்றியைத் தீர்மானிக்கக் கூடியதாகும். சீதன முறையுள்ள அண்டை நாடுகளில் இக் கொடுமையை இல்லாது ஒழிக்க சட்டங்கள் கொண்டு வரப்பட்ட போதும் அவை அம்முறையை ஒழிக்கத் தவறிவிட்டன. இதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது சமூகத்தில் எந்தவித விழிப்புணர்வோ, சீதனத்திற்கு எதிரான உணர்வோ, அன்றிச் சமுதாய மாற்றம் எதுவும் இன்றி சட்டம் கொண்டு வரப்பட்டமைதான் ஆகும். இந்த வகையில், இங்கு சட்டம் வருவதற்குமுன்விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டு வருகின்றது; இம் முயற்சிகள் மிகவும் கடினமான பணி என்பதில் சந்தேகமில்லை. ஆனால் பல நூற்றாண்டுகள் சமூகத்தில் ஊறிப்போன ஒன்றை இலகுவில் அகற்றிவிட முடியாது ஆனால், இதில் நாம் பெறும் வெற்றி மூலம், உலகில் சீதன முறையை ஒழித்த இனத்திற்கு எம்மை முன்னுதாரணமாக்கும் என்பதில் ஐயமில்லை.

லைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பின்னடித்து வருகிறது.

யாழ். பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தை ஆரம்பிப்பது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுஅதிகாரிகளுக்கும் யாழ். பல்கலைக்கழக அதிகாரிகளுக்கும் இடையில் இம்மாத நடுப்பகுதியில் கொழும்பில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

யாழ். பல்கலைக்கழகத்தில் இப்பீடத்தை ஆரம்பிப்பதற்கு தற்பொழுது நிதிப் பற்றாக்குறையாக இருப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது மேலும் யாழ்ப்பாணத்தில் இப்பீடத்துக்காக புதிய கட்டடத்தைக் கட்டுவதற்கு வசதிகள் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது ஆனால் இப்பீடத்தை ஆரம்பிப்பதற்கு இக்காரணங்கள் தடையாக இருக்காது என்றும் பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு யாழ்ப்பாணத்தில் இப்பீடம அமைவதை விரும்பவில்லை

## நிகழ்ச்சி நிரல்

**1994 . 05 . 22**

**ஞாயிறு இரவு**

8. 01 - சிறப்பு நிகழ்ச்சி 1958 -ம் ஆண்டு இனக்கலவரம்
8. 10 - தாயகப் பாடல்கள்
8. 30 - செய்திகள்
8. 40 - தொடர் நாடகம் ''இலங்கை மண்'' 25 -ம் அங்கம்

**1994 . 05 . 23**

**திங்கள் காலை**

7. 02 - மாவீரர் வணக்கம்
7. 15 - மணியாரம்
7. 30 - செய்திகள்
7. 35 - பத்திரிகைச்செய்திகள்
7. 40 - தாயகப் பாடல்கள்

கருவிகள் தட்டச்சு இயந்திரங்கள் போன்றவை வாழ்வகத்திற்கு வழங்கப்பட உள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

(சி) (தி)

## சான்றிதழ் வழங்கலும் பயிற்சி ஆரம்பமும்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பருத்தித்துறைப் பிரிவின் கீழ் தையல் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும், நான்காவது தையல் பயிற்சியின் ஆரம்ப விழாவும் முறையே பருத்தித்துறைப் பிரிவு அலுவலகத்திலும், வல்வெட்டித்துறை கணபதி பாலர் பாடசாலையிலும் இன்று காலையில் பேராசிரியர் வி கே. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதமவிருந்தினர்களாக வண. பிதா ப.எம் இமானுவேல் பிரதேச செயலாளர் ஆ. சிவசுவாமி மற்றும் வைத்திய கலாநிதி த. சிங்கராஜா, கு.பாலகிருஷ்ணன், கோ தியாகராஜா ஆகியோர் கலந்து கொளளவுளளனர்.

வேண்டும் எனக் கலாநிதி பொர்லன்வில விமலரட்ண தேரோ தெரிவித்துள்ளார்.

'திருமல' என்ற சிங்களப் பத்திரிகைக்கு பேட்டியளித்த அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு. கிழக்கு பகுதியில் ஒரு அரசாங்கத்தை நிறுவுவது அல்லது அப் பகுதியில் ஒரு பிரதேச ஆட்சியைப் பெற்றுக் கொள்வது என்னும் நோக்குடன் இளைஞர்களால் ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இது தான் அங்கு ஏற்பட்ட பிரச்சினை

இதற்கு யுத்தத்தினால் நாம்விடைகொடுக்க முடியாது வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினையை நாம் முதலில் நன்கு உணர வேண்டும் அப் பிரச்சினையை அடிப்படையாக கொண்டே தீர்வு தீர்மானிக்கப்பட வேண்டும் என்றார்.

யுத்தத்தை மையமாகக் கொண்டால் அது பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும் எனவே பேச்சுவார்த்தை மூலமே இறுதியான உறுதியான தீர்வை வழங்க முடியும். யுத்தத்தினால் என்றும் எந்த

மை தன்மையும், பரஸ்பர நம்பிக்கையும் ஏற்படும். மக்கள் மற்றும் அரசியல்வாதிகள் எதிர் பார்ப்பது போன்று அதிகார பரவலாக்கலில் பிளவு படாது என்றும் தெரிவித்துள்ளார்.

## அலங்கார உற்சவம்

தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிநடைபெற்று வருகிறது.

இன்று ஞாயிற்றுக் கிழமைகாலை 10 00 மணிக்கு புதிதாக அமைக்கப்பட்ட தேரில் அம்பாள் திருவீதியுலா வந்து பின் நவசக்தி அர்ச்சனையும் மாலை 5 மணிக்கு தேரடி உற்சவமும் நடைபெறும்

தீர்த்தோற்சவம் நாளை காலை9 மணிக்கு இடம்பெற்று மாலை 5 மணிக்கு திருவூஞ்சல் நிகழ்வை அடுத்து குரு வழிபாடும் இடம்பெறும் (24)

## மனைவியின் சொத்தில் கணவனுக்கும் பங்கு

### சிங்கப்பூர் நீதிமன்றம் தீர்ப்பு

வேலைக்கு செல்லும் தனது மனைவிக்காக வீட்டைக் கவனித்து பிள்ளைகளைப் பராமரிக்கும் ஒரு ஆணுக்கு திருமண பந்தம் தோல்வியுறும் பட்சத்தில் மனைவியின் சொத்துக்களில் உரிமை கோர இடமுண்டு. இவ்வாறு சிங்கப்பூர் உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது

55 வயதான நபர் ஒருவர் குடியிருந்து வந்த மாடி வீட்டுக்கான முழுப்பணத்தையும் இந்த நபரின் முன்னைய மனைவி செலுத்திய போதும் ஒரு பங்கைப் பெற இவருக்கு உரிமை உண்டென்றும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது

கணவன்மார்வேலைசெய்து சம்பாதிப்பதற்கு மனைவிமார் மறைமுகமாக உதவுவதால் கணவனின் சொத்தில் அவர்களுக்கு உரிமை உண்டென்று நீதிமன்றங்கள் தீர்ப்பளித்து இருந்ததும் இங்குசுட்டிக்காட்டப்பட்டது.

## ராவுக்கு வாஜ்பாய் பாராட்டு

அமெரிக்க அதிபர் பில்கிளிண்டனுடனான பேச்சுவார்த்தைகளின் போது காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக விட்டுக் கொடுக்காமைக்கும் அணு ஆயுதப் பிரச்சினையில் எடுக்கப்பட்ட பிரதமரின் நிலைப்பாட்டிற்கும் இந்திய எதிர்க்கட்சித் தலைவரும், பாரதீய ஜனாதாக் கட்சியை சேர்ந்தவருமான அடல் பிகாரி வாஜ்பாய் பாராட்டு தெரிவித்துள்ளார்.

லக்னோவில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில் அணுசக்தி விவகாரத்தில் இந்தியா எடுத்திருக்கும் உறுதியான நிலைப்பாடு தமக்கு மனநிறைவைதருவதாகவும் தெரிவித்துள்ளார்.

## நாஜிகளின் குற்றத்தை மறுப்போருக்கு தண்டனை

(பொன்)

ஹிட்லரின் நாஜிக் கட்சி ஆட்சியில் யூதர்கள் கொலை செய்யப்படவில்லை என்று மறுப்பது ஜெர்மனியில் இப்போது தண்டனைக்குரிய குற்றமாகும்.

யூதர்களை நாஜிகள் கொலை செய்யவில்லை என்று பொய்க்கதை பரப்புபவர்களுக்கு மூன்று வருடச் சிறைத் தண்டனை விதிக்கும் சட்டம் ஒன்றை ஜெர்மன் பாராளுமன்றம் நேற்று முன்தினம் நிறைவேற்றியது.

வலதுசாரி அடிப்படைவாதிகளைக் கண்டிக்கும் சட்டவிதிகளும் ஜெர்மன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

நாஜிக் குறியீடுகளை வரைவது மற்றும் கடல் கடந்து மற்ற நாடுகளில் நாஜிப் பிரசாரம் செய்வதும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

வெளிநாட்டு அகதிகளை ஜெர்மனிக்குள் கடத்துபவர்களுக்குப் பத்துவருடச் சிறைத் தண்டனை விதிக்கும் சட்டத்தையும் பொன் பாராளுமன்றம் நிறைவேற்றியது.

# அஞ்சலி



## திரு. து. நிந்தியானந்தன்
## (நித்தி அண்ணா)

(நிதர்சன நிறுவன தொழில் நுட்பவியலாளரும், ஆலோசகரும்.)

## 21 - 5 - 1994 சனி அன்று

எம்மை ஆழாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத் துயிலில் கிடக்கின்ற நித்தி அண்ணர், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நெஞ்சாரநேசித்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையை உள்ளத்தால் உற்றுணர்ந்துஏற்று, நீண்டகால போராட்டத்துடன் தன்னால் முடிந்தளவு இணைந்து செயலாற்றிய உத்தமர்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர், உறவினர், நண்பர்களுடன், நிதர்சனமும் சோகத்தில் பங்கேற்று துடிக்கிறது.

நினைவில் வாழும் நித்தி அண்ணர் நினைவுடன் தொடரும் எம்பணி.

நிதர்சனம்
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

யாழ் ஸ்ரீதரில்
விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும
நிதர்சனமும் இணைந்து வழங்கும்
மண்ணுக்காக

பாதுகாப்பு

எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். நாட்டின் சீரழிவை தடுக்கும் பொருட்டு இதை உடனடியாக தடுத்து நிறுத்தவும் என அக்கடிதத்தில் சிறிமாவோவைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் மேல்மாகாணசபை முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க அலாரிஸ்கமிஷன், எதிர்க்கட்சி எம். பி கள் ஆகியோருக்கனுப்பப்பட்டுள்ளது.

பாதிப்படைந்த

நஷ்டப் பணத்தை பொருள்ளாகவாயினும் தந்துதவுமாறு யாழ். கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம் யாழ். அரசாங்க அதிபரிடம் கேட்டுள்ளது.

அரசாங்கத்திடம் பெற்று உடனடியாகதந்துதவுமாறு இச் சமாஜம் கேட்டுள்ளது (க)(தி)

தனிநாடு

டத்தில் நன் பெற்ற அனுபவமும் நான்கு வருடங்களாக நான் இலங்கையில் வசித்த அனுபவமுமேயாகும்

நான் தாண்டிக்குளம் இராணுவ காவல் நிலையமூடாக கிளாலி வாவியைக் கடந்து யாழ்ப்பாணம் சென்றேன். இப்பயண கஷ்டங்களை என்னால் நேரில் அவதானிக்க முடிந்தது. பொருட்கள் மீதான அரசின் தடையால் மக்கள் அளவற்ற துன்பம் அடைகின்றனர். கிடைக்கும் பொருட்களை சாதாரண மக்கள் வாங்க முடியாத அளவு விலை உயர்வாக காணப்படுகின்றன. மருந்துகளும் தட்டுப்பாடாக உள்ளன.

யாழ்ப்பாணத்தின் உள்ளேயே பலர் இடம் பெயர்ந்துள்ளனர் சுகாதாரம் குறைவாக உள்ளது. நோய்கள் பரவுகின்றன 4500 குழந்தைகள் சத்துணவின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. மண்ணெண்ணையில் இயங்கும் மோட்டார்கள் மூலம் மின் உற்பத்தி செய்கின்றனர். வாகனங்கள் மண்ணெண்ணையில் இயக்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தை புலிகள் நிர்வகிக்கின்றனர்.

குடாநாட்டில் அரசின் பொலிஸ் படை முற்றாக அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக தமிழீழ காவல் துறை பாதுகாப்புப் பணியை மேற்கொள்கின்றனர். தமிழீழ சட்டதிட்டங்களுக்கு அமைய தமிழீழ நீதிமன்றங்கள் இயங்குகின்றன.

வவுனியா தடைமுகாமில் பொருளாதார தடை அமுல்படுத்தப்படுகிறது விமானக் குண்டு வீச்சுகள் நடைபெறுகிறது. தென்னிலங்கையில்

## நித்தி காலமானார்

நிதர்சனம்நிறுவனதொழில் நுட்பவியலாளரும், ஆலோசகரும், பிரபல ஒலிப்பதிவாளருமான து. நித்தியானந்தன் [நித்தியண்ணர்] நேற்று காலமானார்.

**சீதனம் உனக்குச் சிலந்திவலை - அதை தீயிட்டுக் காணுவோம் புதிய நிலை**

# பருத்தித்துறை மோதலில் 7 கடற்புலிகள் வீரச்சாவு



கடற்புலி
**மேஜர் வசந்தன்**



கடற்புலி
**கப்டன் கணேஸ்**



கடற்புலி
**மேஜர் மேனன் (கலைஞானன்)**



கடற்புலி
**கப்டன் குகா (புரலவன்)**





கடற்புலி

அமைச்சர்

எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. தேசியப் பட்டியல் உறுப்பினர் திருமதி ரூபா சிறியானி தனது பதவியிலிருந்து இராஜினாமா செய்தபோது சில அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டது தொடர்பாக ஐ.தே.க. உயர் வட்டாரத்தில் ஆராயப்பட்டு வருகிறது.

ஜனாதிபதி

பதி வேட்பாளராகவும் சந்திரிகா குமரணதுங்கா நியமிக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடப்பட இருப்பதாகவும், மேலும் இவர் சிறிமாவோ பண்டாரநாயக்காவே கட்சித் தலைவியாகவும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்படியான தலைமைப் போட்டி ஏற்படலாம் என்பதனாலேயே சுதந்திரக் கட்சி ஒன்பது ஆண்டுகளாக தனது செயற்குழுக் கூட்டத்தை கூட்டவில்லை எனவும் கூறப்படுகிறது.

கடற்புலிகளின்

வடமராட்சிக் கோட்டத்தில் காலை 10.00 மணிக்கு சுப்பர்மடம் சந்தியில் ஆரம்பித்து பருத்தித்துறையில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும் பின்னர் மாலுசந்தி, நெல்லியடியூடாக குஞ்சர்கடை சென்று அங்கு மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும் பின்னர் சலாம் வீதி, நவிண்டில், உடுப்பிட்டிச் சந்தியூடாக வல்வெட்டித்துறையை அடைந்து பிற்பகல் 3.00 மணிக்கு அஞ்சலிக்கூட்டம் நடைபெறும் பின்னர் பொலிகண்டியூடாக மாவீரர் துயிலுமில்லத்தைச் சென்றடையும்.

புதிய

ஐந்து விமானங்களும் 18ஆசனங்களைக் கொண்ட வை 12 ரக ஒன்பது விமானங்களும் எம் ஐ 8ரக உலங்குவானூர்திகள் மூன்றும் உள்ளன எனவே இவை படையினரின் தேவைக்கு இப்போது ஓரளவு போதுமானவை இதனால் இதை விடுத்து படையினரின் அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்யுங்கள் என அவ்வதிகாரிகள் கோரியுள்ளனர்

# மரண அறிவித்தல்கள்



**துரைராசா நித்தியானந்தன்**
(பிரபல ஒலிப்பதிவாளர்)

## மண்ணுக்காக

தினசரி மாலை 3.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு காலை 10.30 மணி,
மாலை 3.00 மணி, 6.00 மணி

(சி-9457)


## குருக்கள் தேவை

அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் ஆலயத்திற்கு பூசை செய்வதற்கு நிரந்தர குருக்கள் தேவை தங்குமிடம கொடுக்கப்படும். சம்பளம் நேரில் பேசி தீர்க்கப்படும்.

முடிவுத்திகதி 27-5-94

தொடர்பு.-

ஐயனார் பரிபாலன சபை
அராலி கிழக்கு

(8351)

பொருளாதார தடை அமுல்படுத்தப்படுகிறது விமானக்குண்டு வீச்சுகள் நடைபெறுகிறது. தென்னிலங்கையில் பரவலாக சமாதானக்குரல் ஒலிக்கப்படுகின்றது சமாதானத்தை நிலைநாட்டும்படி சிங்கள மக்களால் ஆட்சியாளர்களுக்கு அழுத்தம்கொடுக்கப்படுமானால் நாம் மகிழ்ச்சியடைவோம்.

யாழ்ப்பாண மக்கள் மத்தியில் ஆத்திரத்தை ஏற்படுத்தும் அரச செயல்கள் வடக்கில் சமாதான சூழ்நிலையை உருவாக்க வழிகோலமாட்டாது. சமாதானத்தைத் தாமும் உருவாக்காது உருவாக்க முயல்பவரையும் தடுக்கும் அரசின் போக்கு விசித்திரமானது, இனப்பிரச்சினை தீர்வில் வெளிநாட்டு தலையீட்டை அரசு தவிர்க்கின்றது என அவர்குறிப்பிட்டுள்ளார்.





கடற்புலி
**மேஜர் சாள்ஸ்**
**(குணா)**

கடற்புலி
**கப்டன் மணாளன்**



கடற்புலி
**கப்டன் சாமந்தி**
(சஞ்சிகா)

பருத்தித்துறைக்கடற் ரப்பில் 19-5-94 அன்று கடற் டைக் கப்பலுடன் ஏற்பட்ட திடீர் மோதலில் வீரச்சாவடைந்த இவ் ஏழு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்,

## துரைராசா நித்தியானந்தன்

(பிரபல ஒலிப்பதிவாளர்)

துரைராசா நித்தியானந்தன் 21-05-94-ல் காலமாகி விட்டார். அன்னார் புஸ்பதேவியின் அன்புக் கணவரும், தேவானந்தன் (டன்னா), சகிலா, ரமணா ஆகியோரின் அன்புத்தந்தையும், செல்லத்துரையின் மருமகனும், செல்வகாந்தராஜா (சங்கானை), செல்வராஜா (சிவலிங்கப்புளியடி), தங்கராணி, கிருஷ்ணபிள்ளை யோகேஸ்வரி ராஜசேகரம் (ஆசிரியர் புனித மரியாள் வித்தியாலயம் யாழ்). இந்திராணி நடராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை இன்று (22-5 94) ஞாயிற்றுக்கிழமை மாலை 3-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

அர்ச்சுனா வீதி, புஸ்பதேவி (மனைவி)
ஸ்ரீதர் தியேட்டருக்கு முன்பாக)

(8356)


## தமிழீழ வைப்பகம்

## திறப்பு விழா

நிகழும் 2025 ஆம் திருவள்ளுவராண்டு
வைகாசி மாதம் 9 ஆம் நாள்
23 - 05 - 94 திங்கட்கிழமை
பகல் 12-00 மணியளவில்.

யாழ்நகர் கன்னாதிட்டியில்
அமைந்த தனது பணியகத்தினிலே
தமிழர் பொருண்மிய வலுவினை பெருக்க
தன் பணி தொடங்குகிறது,

❋ "தமிழீழ வைப்பகம்" ❋

முந்து பணிகள் மூச்சுடன் இயற்ற
தங்களின் உறவே தக்கதென்பதனால்
வந்து கலந்து வாழ்த்திடுமாறு
அன்பு கனிந்து அழைக்கிறோம் வருக.

நிதிப் பொறுப்பாளர்
தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-9478)


## மாவீரர் உருவப்படங்கள் வெளிவந்துள்ளன

01. கடற்கரும்புலி மேஜர் குமணன்/கோபி சுப்பிரமணியம் செல்வலிங்கம் மன்னார், 02. கடற்கரும்புலி மேஜர் கணேஸ் நாகநாதி ஜீவநேசன் புத்தூர். இம் மாவீரர்களின் உருவப்படங்களை சிறு அன்பளிப்புச் செலுத்துவதன் மூலமாக தமிழீழ மாவீரர் பணிமனை, கொக்குவிலில் 8 30 மணி தொடக்கம் 4.30 மணிவரையான நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்று தமிழீழ மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது:

**இலங்கை**

வழங்கப்பட இருக்கிறது.

குறிப்பிட்ட நேரத்தில் செஞ்சிலுவைச் சங்க வாகனங்கள் எங்கெங்கு இருக்கின்றன என்பதைப் பாதுகாப்பு அமைச்சு அறிந்து கொள்ளும் பொருட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், முற்கூட்டியே தயாரிக்கப்படும் இந்த அட்டவணைக்கு புறம்பாக வாகனம் எங்காவது செல்ல வேண்டி இருப்பின் அது பற்றி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டபின்னரே சேவையில் ஈடுபடவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


## செல்லப்பா நல்லையா

(உரிமையாளர் கமலா ஸ்ருடியோ கிளிநொச்சி)

மட்டுவிலை பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா நல்லையா காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா, வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும், பிறேம்நாத், திருமதி மாலா குகதாசன் (பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை), திருமதி கலாயோகேந்திரன் (கட்டடத் திணைக்களம் கொக்குவில்), திருமதி லதா சிவஞானம், ரகுநாத் (பொறியியல் பீடம் 1ஆம் வருடம் பேராதனைப் பல்கலைக்கழகம்), கோபிநாத் (மாணவன் கனகபுரம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறீமதி, யோகேந்திரன் [இரசாயனப்பகுதி யாழ். பல்கலைக்கழகம்], குகதாசன் [தொழில்நுட்பவியலாளர்], சிவஞானம் [ஆசிரியர் கிளிநொச்சி] ஆகியோரின் மாமனாரும் அபிராமி, பகீரதி, சசிரேகா, தர்சிகா, லகுவனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 22-5-94 இன்று ஞாயிற்றுக்கிழமை 10-00 மணியளவில் 8A, கலட்டி அம்மன் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

8A, கலட்டி அம்மன் வீதி,
K K S. வீதி,
யாழ்ப்பாணம் [8346]

தகவல்:
மு. யோகேந்திரன்
(மருமகன்)